# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) - 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## BBA / COM 37 (I) – AUDITING

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. சுதந்திரமான ஒருவரினால் நிதித் தகவல்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

(அ) கணக்காய்வுக்கும் மீளாய்வுக்கும் இடையிலான பிரதான வித்தியாசம் என்ன?

(03 புள்ளிகள்)

(ஆ) கணக்காய்வில் ஈடுபடும் பிரதான தரப்பினர் யாவர்? (03 புள்ளிகள்)

(இ) கணக்கியல், கணக்காய்வு என்பன பாடவிதானங்களின்படி வேறுபட்டுக் காணப்பட்டாலும், நடைமுறையில் அவை இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. இந்த இரண்டு பாடங்களும் தங்களுக்கான கணக்கியல் எண்ணக்கருக்கள், கணக்காய்வு எண்ணக்கருக்களைக் கொண்டுள்ளன.

ஏதாவது இரண்டு கணக்காய்வு எண்ணக்கருக்களை எடுத்து, அவை எவ்வாறு கணக்கீட்டு எண்ணக்கருக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன என விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

02. உள்நாட்டு சந்தைக்கு புடவைக் கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும் வரையறுத்த XY கம்பனியில் கனிஷ்ட கணக்காய்வாளராக நீர் இருக்கின்றீர். இக்கம்பனியானது உள்நாட்டு, வெளிநாட்டு விநியோகஸ்தர்கள் மத்தியில் பாரிய போட்டித் தன்மையை எதிர்நோக்குகின்றது. உமது பிரதம கணக்காளர் உம்மை வியாபாரம் பற்றிய அறிவினைச் சேகரிக்குமாறு வேண்டிக்கொண்டுள்ளார்.

(அ) வரையறுத்த XY நிறுவனத்தின் வணிகம் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்ள எவ்வாறான மூலங்களைப் பயன்படுத்துவீர்?

(05 புள்ளிகள்)

(ஆ) வரையறுத்த XY நிறுவனத்தின் வணிகம் பற்றிய தகவல்களை நியாயப்படுத்தும்போது எவ்வாறான பகுதிகளை நீர் கவனத்திற்கொள்வீர்?

(05 புள்ளிகள்)

(இ) வரையறுத்த XY நிறுவனத்தின் வணிகம் பற்றிய தகவல்களின் அடிப்படையில், ஐந்தொகையில் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்தும் என நீர் நினைக்கும் முக்கியமான கணக்காய்வுப் பகுதிகளை / விடயங்களை அடையாளம் காண்க.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

03. கணக்காய்வாளர் ஒருவர் எதிர்பார்க்கப்படும் கணக்காய்வு விசாலத்தையும், கணக்காய்வு நடவடிக்கையையும் விபரிக்கும் ஒட்டு மொத்த கணக்காய்வுத் திட்டமிடலை விருத்திசெய்து ஆவணப்படுத்த வேண்டும். மேலும் திட்டமிடல் கட்டத்தில் அகக்கட்டுப்பாட்டு முறைமையை சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

(அ) (i) கணக்காய்வு திட்டமிடலின் அனுகூலங்களை விளக்குவதுடன் திட்டமிடலின்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய நீர் கருதும் முக்கியமான விடயங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) ஒரு நிறுவனத்தில் கணக்காய்வு மேற்கொள்கையில் காணப்படும் நிரந்தரக்கோவை (permanent file), தற்காலிக நடைமுறைக் கோவை (temporary file) என்றால் என்ன என்பதையும் அதன் உள்ளடக்கங்களையும் விளக்குக. (03 புள்ளிகள்)

(ஆ) (i) கணக்காய்வு விசாலம் என்றால் என்ன என்பதையும் அதன் வரையறைகளையும் விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) கட்டுப்பாட்டு சூழலை மதிப்பீடு செய்கையில் கவனம் செலுத்தும் காரணிகளை விளக்குவதுடன் உமது வாடிக்கையாளர் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சூழலை மதிப்பீடு செய்கையில் இக்காரணிகளை எவ்வாறு பயன்படுத்துவீர் என விளக்குக. (03 புள்ளிகள்)

(iii) கணக்கீட்டு முறைமை குறித்து அகக்கட்டுப்பாட்டு முறைமையை அமுல்படுத்தும்போது முகாமையினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

04. கணனி மென்பாகப் பொருட்களை உற்பத்தி செய்யும் வரையறுத்த லங்கா கொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது உம்மை அந்நிறுவனத்திற்கு கணக்காய்வாளராக நியமித்துள்ளது. நியமனக் கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வாளரின் கடமைகளும், உரிமைகளும் கம்பனிச் சட்டத்திற்கேற்ப பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் கணக்காய்வாளர் நியமனமானது எந்த நேரத்திலும் கம்பனிப் பணிப்பாளர் சபையினால் எவ்வித காரணமும் கொடுக்காமல் முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்.

(a) நீர் வரையறுத்த லங்கா கொம் நிறுவனத்தின் கணக்காய்வாளர் என்ற அடிப்படையில் கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் உமது கடமைகளும் உரிமைகளும் எவை என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(b) உமது நியமனத்தின் பிரகாரம் நீர் எந்த நேரத்திலும் பணிப்பாளர் சபையினால் பதவியில் இருந்து நீக்கப்படலாம். இதனை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? விளக்குக. (04 புள்ளிகள்)

(c) கணக்காய்வாளராக தமது நியமனத்தை ஏற்றுக்கொள்ள முன்னர் ஒரு கணக்காய்வாளர் உயர்தொழில் நடைமுறை குறித்து பின்பற்ற வேண்டிய செய்முறைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(d) ஆண்டுப் பொதுக்கூட்டம் தவிர்ந்த ஏனைய சூழ்நிலைகளில் கணக்காய்வாளரை நியமிக்கும் அதிகாரத்தினை யார் கொண்டுள்ளார்? (04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

05. விலைகூறப்பட்ட பொதுக்கம்பனியான வரையறுத்த AB நிறுவனத்தின் சிரேஷ்ட கணக்காய்வாளராக நீர் காணப்படுகின்றீர். இக்கம்பனியானது உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளுக்கு தோல் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. இடர் காணப்படும் பகுதிகளை அடையாளம் காண்பதற்காக ஆரம்ப பகுப்பாய்வு மீளாய்வு செய்யும் முகமாக 31.03.2007 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் உமக்கு தரப்படுகின்றன.

| 31 மார்ச்சில் முடிவடையும் வருடம் | 2007 (Rs) | 2006 (Rs) |
|---|---|---|
| விற்பனைகள் | 240000 | 204000 |
| ஏனைய வருமானம் (வாடகை) | 500 | 475 |
| | --------- | ----------- |
| | 240500 | 204475 |
| விற்ற சரக்கின் கொள்விலை | (190000) | (170000) |
| மொத்த இலாபம் | 50500 | 34475 |
| விநியோகச் செலவு | (20000) | (12000) |
| நிருவாகச் செலவு | (18000) | (12575) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | (2500) | (1500) |
| செயற்பாட்டு நடவடிக்கைக்கான இலாபம் / நட்டம் | 10000 | 8400 |
| நிதிச்செலவுகள் | (230) | (750) |
| துணைக்கம்பனி இலாபம் | 320 | 250 |
| வரிக்கும் சிறுபங்காளருக்கும் முன் இலாபம் | 9090 | 7900 |
| வருமான வரி | (3180) | (2750) |
| | ---------- | -------------- |
| சாதாரண நடவடிக்கையின் இலாபம் | 5910 | 5150 |
| சிறுபான்மை பங்காளர் இலாபம் | (250) | (50) |
| தேறிய. இலபாம் | 5660 | 5100 |

| **31 மார்ச் இற்கான ஐந்தொகை** | | |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | - | - |
| பொறி இயந்திரம் | 26000 | 25000 |
| சொத்துக்களின் முதலீடு | 7050 | 7000 |
| கற்பனைச் சொத்துக்கள் | 7500 | 2850 |
| துணைக்கம்பனி முதலீடு | 1250 | 1200 |
| முதலீடுகள் | 1400 | 1275 |
| பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்து | 750 | - |
| ஓய்வூதியச் சொத்துக்கள் | 750 | 700 |
| | 44700 | 38025 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| சரக்கிருப்புக்கள் | 26000 | 20200 |
| கடன்பட்டோரும் பெறுவனவுகளும் | 18000 | 11000 |
| முற்கொடுப்பனவுகள் | 50 | 365 |
| ஏனைய சொத்துக்கள் | 150 | 150 |
| காசு | 8750 | 11500 |
| | 52950 | 43215 |
| **மொத்த சொத்துக்கள்** | 97650 | 81240 |
| Equity and liabilities | | |
| மூலதனமும் ஒதுக்கங்களும் | | |
| விநியோகித்த மூலதனம் | 12500 | 10000 |
| பங்குவட்டம் | 7000 | 650 |
| ஏனைய ஒதுக்கங்கள் | (1500) | (600) |
| திரண்ட இலாபம் | 32500 | 28500 |
| மொத்த உரிமை | 55500 | 38550 |
| சிறுபான்மை முதலீடுகள் | 550 | 350 |
| நீண்டகாலக் கடன்கள் | | |
| கடன்கள், பெறுவனவுகள் | 10100 | 10000 |

| | | |
|---|---|---|
| ஏற்பாடுகள் | 3000 | 2850 |
| அரச மானியங்கள் | 1000 | 650 |
| பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்புக்கள் | 3000 | 2700 |
| | 17650 | 16790 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| கடன்கொடுத்தோரும் ஏனைய பொறுப்புக்களும் | 16700 | 16500 |
| கடன்களும் பெறுவனவுகளும் | 2650 | 4850 |
| ஏனைய பொறுப்புக்கள் | 200 | 250 |
| அரச மானியங்கள் | 1050 | 1200 |
| செலுத்தவேண்டிய வருமானவரி | 3750 | 2850 |
| ஏற்பாடுகள் | 550 | 250 |
| | 24500 | 25900 |
| | 97650 | 81240 |

பிரித்தெடுத்த அட்டவணை

| சொத்துக்கள் | காணி, கட்டிடங்கள் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|
| மீதி | 11700 | 12500 | 247200 |
| சேர்ப்பனவு | 1600 | 10200 | 11800 |
| விற்பனை | (2100) | (4750) | (6850) |
| சேதம் அடைந்தவை | - | (250) | (250) |
| பெறுமானத்தேய்வு | (425) | (3050) | (3475) |

வேண்டப்படுவது

(அ) பகுப்பாய்வு செய்முறை மீளாய்வு எப்போது நிறைவேற்றப்படுகின்றது? இதன் அனுகூலங்கள், பிரதிகூலங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) உமது கணக்காய்வுக்கு உதவும் பகுப்பாய்வு செய்முறைகளை நிறைவேற்றுக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

06. பின்வரும் சொற்பதங்களை விளக்குக.

(i) கணக்காய்வுக் கடிம் - கணக்காய்வுப் பலவீனக் கடிதம்

(ii) இணைக்கப் பரிசோதனை – முழுமையான பரிசோதனை

(iii) சான்று உறுதிப்பத்திரம் - சான்று உறுதிப்படுத்தல்

(iv) முனைப்புடனான அபிப்பிராயம் - முனைப்பழியா அபிப்பிராயம்

(5 X 4=20 புள்ளிகள்)

****